# புயல் சேதத்தை மதிப்பிட மத்திய குழு விரைவில் வருகை: மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் உடனான ஆலோசனைக்கு பிறகு முதல்வர் ஸ்டாலின் தகவல்


தமிழ்நாட்டில் 'மிக்ஜாம்' புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம் தெரிவித்து, இடைக்கால நிதியுதவி கோரும் கோரிக்கை மனுவை முதல்வர் மு.க.ஸ்டாலின், தலைமைச் செயலகத்தில் அளித்தார்.

**சென்னை:** சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் புயலால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பிட மத்திய குழு விரைவில் வருகை தர உள்ளதாக மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்உடனான ஆலோசனைக்கு பிறகு முதல்வர்ஸ்டாலின் தெரிவித்தார்.

மிக்ஜாம் வெள்ள பாதிப்புகளை பார்வையிட நேற்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சென்னை வந்தார்.பாதிப்புகளை பார்வையிட்ட பிறகு, தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து ஆலோசனை நடத்தினார். அதன்பிறகு, முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:

புயல், வெள்ள பாதிப்பை ஆய்வு செய்தமத்திய அமைச்சருக்கு தமிழக மக்கள் சார்பிலும், அரசு சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையின் வரலாற்றில் இல்லாத அளவுக்கு பெய்த பெருமழையால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மீண்டு, சென்னை நகரமும், மக்களும்

EVA STALIN IAS ACADEMY

இயல்புநிலைக்கு வரத் தொடங்கியுள்ளனர். இந்த பெரும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு எடுத்து வருகிறது.

தமிழக அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால், உயிரிழப்புகளும், பொருட்சேதங்களும் பெருமளவில் தவிர்க்கப்பட்டுள்ளது.

சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள் போன்ற பொதுக் கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சீரமைக்கவும், நிவாரண உதவிகளை வழங்குவதற்கும் ஏதுவாக தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.5060 கோடி நிதி வழங்கும்படி பிரதமருக்கு ஏற்கெனவே நான் கோரிக்கை விடுத்திருந்தேன். நமது கோரிக்கைகள் குறித்த கோரிக்கை மனுவை மத்திய அமைச்சரிடம் அளித்துள்ளேன். இழப்பீடுகளை மதிப்பீடு செய்ய மத்திய அரசின் குழு ஒன்று விரைவில் தமிழகம் வர உள்ளது. தமிழக அரசின் இந்த கோரிக்கைகளை பரிசீலித்து உரிய நிதியுதவியை மத்திய அரசுவிரைவில் வழங்கும் என மத்திய அமைச்சர்உறுதியளித்துள்ளார். நிவாரணப் பணிகளை முழுவீச்சில் தொடர்ந்து மேற்கொண்டு, அனைத்து பகுதிகளையும் இயல்பு நிலைக்கு விரைவில் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு தொடர்ந்து எடுக்கும். இவ்வாறு முதல்வர் பேசினார்.

**தமிழகத்துக்கு ரூ. 450 கோடி விடுவிப்பு:** பின்னர் மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் கூறியதாவது: தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகளால் பிரதமர் மோடி மிகுந்ததுயரமடைந்துள்ளார். இந்த குழப்பமானசூழலை பிரதமர் மோடி கண்காணித்துவருவதுடன், முதல்வர் ஸ்டாலினுடனும் பேசியுள்ளார். மேலும், பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு உதவ உத்தரவிட்டுள்ளார். இங்குள்ள சூழல் குறித்து தனிப்பட்ட முறையில் கண்காணிக்கவும், தேவையான

EVA STALIN IAS ACADEMY

நடவடிக்கைகளை எடுக்கவும் எனக்கு அவர்உத்தரவிட்டுள்ளார். ராணுவம், கடற்படை, விமானப்படை, கடலோர பாதுகாப்புப் படை, வானிலை ஆராய்ச்சி மையம், துணை ராணுவம் உள்ளிட்ட அனைத்து மத்திய அரசின் அமைப்புகள், வெள்ளத்தால் ஏற்பட்ட துயரை தணிக்கும் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன. பாதிப்பு நிலவரத்தை அறிய, நான் ஹெலிகாப்டரில் சென்று ஆய்வு செய்தேன்.

அதன்பிறகு, முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசினேன். தமிழக அரசு அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தினேன். இங்குள்ள சூழலை மாற்ற மத்திய அரசுதன்னால் இயன்ற முயற்சிகளை செய்யும். தேவைப்படும் பட்சத்தில் மேலும் விரிவுபடுத்துவோம். தமிழக நலனுக்காக மத்திய அரசு தன்னை பணித்துள்ளது. மக்களின் பாதிப்பை நீக்க மத்திய அரசு அமைப்புகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலம் இதை அறிய முடியும்.

மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு மத்திய அரசு, தமிழகத்துக்கு ரூ.450 கோடியை விடுவிக்க உள்துறை அமைச்சகத்துக்கு பிரதமர் உத்தரவிட்டுள்ளார். ஏற்கெனவே, முதல் தவணையாக ரூ.450 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. சமீப காலமாக சென்னையில் வெள்ள பாதிப்புகள் மீண்டும் மீண்டும் ஏற்பட்டு வருகிறது.

எனவே, தேசிய பேரிடர் தணிப்பு நிதியின் கீழ், சென்னை வடிகால் திட்டத்துக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வெள்ள மேலாண்மை நடவடிக்கைக்கு ரூ.561.29 கோடி மதிப்பிலான வெள்ளத் தணிப்பு திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில், ரூ.500 கோடி மத்திய நிதியும் அடங்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சந்திப்பின் போது, மத்திய இணைஅமைச்சர் எல்.முருகன், தமிழக அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, தலைமைச்

செயலர் சிவ்தாஸ் மீனா, டிஜிபி சங்கர் ஜிவால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தொழில்நுட்பத்தால் பிற நாடுகளைவிட இந்தியா அதிகம் சாதித்துள்ளது: பிரதமர் மோடி



நரேந்திர மோடி I கோப்புப் படம்

**புதுடெல்லி:** பிற நாடுகள் ஒரு தலைமுறை காலத்தில் அடையும் வளர்ச்சியை இந்தியா, தொழில்நுட்பத்தின் உதவியுடன் கடந்த 9-10 ஆண்டுகளில் அடைந்துள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2023-ம் ஆண்டுக்கான சர்வதேச செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாடு புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் வரும் 12-ம் தேதி தொடங்கி 14-ம் தேதி வரை நடைபெறுகிறது. நிகழ்ச்சியை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைக்கிறார். கவர்ந்திழுக்கும் இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்க அனைவருக்கும் அழைப்பு விடுத்து லிங்க்டுஇன் தளத்தில் பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: "செயற்கை நுண்ணறிவு மற்றும் கண்டுபிடிப்புகளின் முன்னேற்றங்களைக் கொண்டாடும் ஒரு கவர்ச்சிகரமான நிகழ்ச்சியான செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டுக்கு உங்கள் அனைவரையும் அழைக்க விரும்புகிறேன்! உச்சி மாநாடு டிசம்பர் 12-

ஆம் தேதி தொடங்குகிறது. துடிப்பான இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக இருக்க நீங்கள் விரும்புவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

நாம் மிகவும் சுவாரஸ்யமான காலகட்டத்தில் வாழ்கிறோம். ஒரு காலத்தில் கற்பனை உலகில் மட்டுமே கருதப்பட்டதை, பல பத்தாண்டுகளில் நிகழ்ந்த வேகமான கண்டுபிடிப்புகள் நிஜமாக்கி இருக்கின்றன. விரைவான முன்னேற்றத்தின் இந்த சூறாவளியில், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் அதன் பயன்பாடுகள் ஒரு பகுதியாக உள்ளது. இந்த புரட்சிகரமான தொழில்நுட்பம் இப்போது புதிய தலைமுறையின் கைகளில் உள்ளது.

துடிப்பான ஸ்டார்ட்-அப் சூழல் அமைப்பு மற்றும் திறமையான பணியாளர்களைக் கொண்ட இளமையான நாடுகளில் ஒன்றாக இருக்கும் இந்தியா, AI இன் பரிணாம வளர்ச்சியில் பங்களிப்பாளராக தயாராக உள்ளது. உலக அளவில் பாதுகாப்பான, மலிவான, நிலையான தீர்வுகளை இந்தியா வழங்குகிறது. இந்தியாவின் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு (DPI) முன்முயற்சி அத்தகைய முன்னோடி முயற்சிகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

கடந்த 9-10 ஆண்டுகளில், இந்தியாவும் அதன் குடிமக்களும் தொழில்நுட்பத்தின் உதவியுடன் மிகப் பெரிய வளர்ச்சியை கண்டுள்ளனர். பிற நாடுகள் ஒரு தலைமுறை காலத்தில் அடையும் வளர்ச்சியை இந்தியா, தொழில்நுட்பத்தின் உதவியுடன் கடந்த 9-10 ஆண்டுகளில் அடைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. இணைய இணைப்பு, டிஜிட்டல் தொழில்நுட்பம், மொபைல் ஃபோன்களின் அதிவேக பயன்பாடு காரணமாக இது சாத்தியமானது.

இதேபோல், AI துறையில் இந்தியா தனது குடிமக்களை மேம்படுத்த ஒரு மாபெரும் பாய்ச்சலை எடுக்க விரும்புகிறது. குடிமக்களுக்கு அவர்களின் மொழியில் சேவை செய்ய, கல்வியை எளிதாக்க, சுகாதார சேவையை அணுகக்கூடியதாக மாற்ற, விவசாயத்தை மேலும் அறிவுப்பூர்வமாக அணுக என பல்வேறு நோக்கங்களுக்காக AI-ஐ இந்தியா பயன்படுத்துகிறது. இந்தியா வளரும்போது, அனைவரையும் உள்ளடக்கிய சமமான வளர்ச்சி மாதிரியை உறுதி செய்ய முயல்கிறது. இந்தியா புதுமைகளை உருவாக்கும்போது, யாரும் பின்தங்கிவிடக்கூடாது என நினைக்கிறது. இந்தியா வழிநடத்தும்போது, அது

அனைவரையும் சிறந்த இலக்கை நோக்கி அழைத்துச் செல்ல முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

AI துறையில் அதே உணர்வோடு, இந்தியாவின் அணுகுமுறை உலகளாவிய புரிதல் மற்றும் சாதகமான சூழலை செயல்படுத்துகிறது. AI-இன் பயன்பாட்டை மனிதகுலத்தின் முன்னேற்றத்தை நோக்கி வழிநடத்துகிறது. இது தொடர்பாக, இந்தியா இணை நிறுவனராக உள்ள செயற்கை நுண்ணறிவுக்கான உலகளாவிய கூட்டாண்மை (GPAI) போன்ற மன்றங்கள் முக்கியமானவை. GPAI ஆனது 28 உறுப்பு நாடுகளையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் அதன் உறுப்பினர்களாகக் கொண்டு AI-இன் பொறுப்பான வளர்ச்சி மற்றும் பயன்பாடுக்கு வழிகாட்டுகிறது.

ஜூன் 2020-இல் தொடங்கப்பட்டதிலிருந்து, GPAI-க்கு இந்தியா குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது. வெளிப்படையான, பாதுகாப்பான மற்றும் பொறுப்பான AI-இன் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பல்வேறு முயற்சிகளில் இந்தியா தீவிரமாக ஈடுபட்டுள்ளது. நவம்பர் 2022-இல் நடைபெற்ற GPAI கவுன்சில் தேர்தலில் இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது பாதுகாப்பான மற்றும் நம்பகமான AI-க்கான அதன் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது.

GPAI-இன் தலைமைத் தலைவராக, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் இந்தியா தனது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. குறிப்பாக AI மக்கள் நலனுக்காக, உலகளாவிய தெற்கின் நாடுகள் அதன் பலன்களைப் பெறுவதில் கடைசியாக இல்லை என்பதை உறுதி செய்கிறது. பாதுகாப்பான மற்றும் நம்பகமான AI-ஐ உறுதி செய்யும் ஒரு ஒழுங்குமுறை கட்டமைப்பிற்கான பாதையை சமைப்பதில் இந்தியா அர்ப்பணிப்புடன் உள்ளது. பரவலான மற்றும் நீடித்த செயலாக்கத்திற்காக அனைத்து நாடுகளையும் ஒன்றிணைக்கிறது. இந்த உச்சிமாநாட்டில் AI எக்ஸ்போ உட்பட பல சுவாரஸ்யமான அமர்வுகள் இருக்கும். இதில் 150 ஸ்டார்ட்-அப்கள் தங்கள் பலத்தை வெளிப்படுத்தும்" என்றுபிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்

## ஐஏஎஸ் போன்ற சிவில் சர்வீஸ் தேர்வுகளுக்கு அந்தந்த மாநில மொழிகளில் கேள்வித்தாள்களை ஏன் வழங்கக்கூடாது? - யுபிஎஸ்சி-க்கு உயர் நீதிமன்றம் கேள்வி



**சென்னை:** ஐஏஎஸ் போன்ற சிவில் சர்வீஸ் தேர்வுகளுக்கான தேர்வுகளை அனைத்து மொழிகளிலும் எழுத அனுமதித்துள்ள நிலையில் கேள்வித்தாள்களையும் அந்தந்த மாநில மொழிகளில் ஏன் வழங்கக்கூடாது என மத்திய அரசின் பணியாளர் தேர்வாணையத்துக்கு உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

இதுதொடர்பாக மதுரையைச் சேர்ந்த எஸ்.பாலமுருகன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், ”ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்ற சிவில் சர்வீசஸ் தேர்வுகளை அனைத்து மொழிகளிலும் எழுத மத்திய அரசின் பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) அனுமதி அளித்துள்ளது. ஆனால் கேள்வித்தாள்களை மட்டும் ஆங்கிலம் மற்றும் இந்தியில் வழங்குகிறது. இதனால் கேள்விகளைப் புரிந்து கொண்டு சரியாக பதிலளிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. இதன்காரணமாக ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்ற உயர் பதவி வேலைவாய்ப்பிலும் சம வாய்ப்பு மறுக்கப்படுகிறது. எனவே அரசியல் சாசனத்தின் 8-வது அட்டவணையில் உள்ள 22 மாநில மொழிகளிலும் ஐஏஎஸ் போன்ற

சிவில் சர்வீசஸ் தேர்வுகளுக்கான கேள்வித்தாள்களையும் வழங்க யுபிஎஸ்சி-க்கு உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி டி.பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் சார்பில், சிவில் சர்வீசஸ் உள்பட மத்திய அரசின் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் அனைத்து தேர்வுகளும் விதிகளுக்கு உட்பட்டே நடத்தப்படுகிறது. இதுதொடர்பாக பதிலளிக்க கால அவகாசம் வழங்க வேண்டும் என கோரப்பட்டது.

அதையடுத்து நீதிபதிகள், சிவில் சர்வீஸ் தேர்வுகளை அனைத்து மொழிகளிலும் எழுத அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான கேள்வித்தாள்களையும் அந்தந்த மாநில மொழிகளில் ஏன் வழங்கக்கூடாது என மத்திய அரசின் பணியாளர் தேர்வாணையத்துக்கு கேள்வி எழுப்பி, இதுதொடர்பாக பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை வரும் ஜனவரி மாதத்துக்கு தள்ளி வைத்துள்ளனர்.

EVA STALIN